தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042—ஆடி 24

2011 ஆகஸ்ட் 9, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

செய்யத் தகுந்த செயல்களை நன்கு அறிதல், அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து செய்தல், செய்ய வேண்டியதைத் துணிவுடன் சொல்லுதல் ஆகியவற்றில் வல்லமை கொண்டதே சிறந்த அரசு.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

8—

கட்டட வசதி

*108—**திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை மற்றும் சிறுமுகை காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதியில் காரமடை காவல் நிலையம் 12–8–1953 முதல் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் கண்டறிவதில் இருந்த தேக்க நிலை தற்போது அகற்றப்பட்டு, உரிய நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 35 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின்மூலம் கட்டுமானப் பணிகளை உடனே துவங்க உத்தரவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காரமடை காவல் நிலையத்திற்குச் சொந்தமான கட்டடம் விரைவில் கட்டப்பட்டு அக்காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட உரிய நிலம் கண்டறியப்பட்டு விரைவில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவோடு மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய முதலமைச்சர், தன்னிகரில்லாத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியில் கறிவேப்பிலை பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு பரிசீலிக்கும் என்ற இனிப்பான அறிவிப்பை நேற்றையதினம் வழங்கி தொகுதி மக்களை இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கிறோம்.*

2011 ஆகஸ்ட் 9]

என்றைக்கெல்லாம் தமிழகத்தினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்கிறார்களோ அன்றைக்கெல்லாம் நாட்டினுடைய சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காக்கும் காவல் துறையை நவீனப்படுத்துகிற வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், 58 ஆண்டுக்காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற காரமடை காவல் நிலையத்திற்கும், 24 ஆண்டுக்காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற சிறுமுகை காவல் நிலையத்திற்கும் இன்றையதினம் புதியதாக கட்டடம் கட்டி வழங்கிட உத்தரவிட்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து தங்கள் வாயிலாக நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம், காவல் நிலையங்களை அதிகப்படுத்துவது போன்ற விஷயங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். காவல் பூத்துகள், காவல் நிலையத்திற்கு உள்ளிட்டு ஒவ்வொரு காவல் நிலைய எல்லைக்குள்ளும் 6 முதல் 7 இடங்களில் சின்னச் சின்ன பூத்துகள் வைக்கவேண்டிய அளவுக்கு இப்போது பிரச்சினை இருக்கிறது. அப்படி பூத்துகள் வைப்பதற்கான, அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடு உண்டா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி கேட்டால் விரிவான பதிலை அளிக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்ட தொகுதிகளுள் ஒன்று.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் ஒரு காவல் நிலையக் கட்டடம் கட்டி திறக்கப்படாமல் உள்ளது. அதோடுமட்டுமல்லாமல், மானாமதுரையில் அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடமும் கட்டி திறக்கப்படாமல் உள்ளது. அதோடுமட்டுமல்லாமல், மானாமதுரையில் காவலர் குடியிருப்புக் கட்டடமும் கட்டி திறக்கப்படாமல் உள்ளது. தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் அந்த மூன்றையும் திறந்து வைத்து செயல்படுத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு இந்தக் கட்டடங்கள் எல்லாம் கட்டி முடித்து தயார் நிலையில் இருப்பது உண்மையென்றால் விரைவிலேயே அவற்றைத் திறந்து வைக்க நான் ஆவன செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாநிலத்தில் 1,258 சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்கள், 196 மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் 38 இருப்புப் பாதை காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1,492 காவல் நிலையங்கள் உள்ளன. 2001 முதல் 2006 வரையிலான எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 221 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2006 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில், 149 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 282 காவல் நிலையங்களில் 92 காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 190 காவல் நிலையங்களில் 11 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள 179 காவல் நிலையங்களில் 15 காவல் நிலையங்களுக்கு தற்போது நிலம் கண்டறியப்பட்டு மேற்படி நிலங்கள் கட்டடம் கட்ட உகந்தவைதானா என்பதற்கான அறிக்கை தமிழ்நாடு

2011 ஆகஸ்ட் 9]

காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. 164 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட நிலங்கள் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆக இந்த 5 ஆண்டு கால ஆட்சி முடிவதற்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களும் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

நெல் சாகுபடி

*490—**திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நீர்வள–நிலவளத் திட்டத்தில் உள்ளடங்கிய திருந்திய நெல் சாகுபடி முறை விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இணையற்ற தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் வேளாண்மைத் துறையில் தமிழகத்தில் நீர்வள—நிலவளத் திட்டத்தில் திருந்திய நெல் (செம்மை நெல்) சாகுபடி முறை விரிவுபடுத்தப்படும், திட்டம் அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செம்மை நெல் சாகுபடியைப் பொறுத்தவரை நீர்வள—நிலவள ஆதாரத் திட்டத்தின்கீழ், ஒரிஜினல் திட்டத்தில் 63 உப வடி நிலங்களில் இதனைச் செயல்படுத்தலாம் என்று இருந்தது. ஆனால் 6 வருட திட்டத்தில் 4 வருடம் 3 மாதங்கள் ஆகியும் இந்தத் திட்டத்திலே, இதுவரைக்கும் 60 உப வடி நிலங்களிலேதான் இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பல*